# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,878/5—1969 නොවැම්බර් 7 වැනි සිකුරාදා—1969.11.7

14,878/5 ம் இலக்கம்—1969 ம ஆண்டு நவம்பர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

ம.தே.அ. எண் : சீ. 162/49 (7)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப் பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, கமத்தொழில், உணவு அமைச்சின் மேலதிக நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் ஜே. எல். ஈ. பெர்ணுந்து அவர்களை, கமத்தொழில், உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் பீ. மகாதேவா அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவெம்பர் 5 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் கமத்தொழில், உணவு அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகவும் கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. பி. எல்கடுவே,
அதி உத்தமரின் கட்டளைப்படி,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1969 நவெம்பர் 4.

11–54

---

# இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

இலங்கை மத்திய வங்கி
நாணயவிதி அதிகாரச் சட்டம்
**ஒப்புமைகள்**

1969 ம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் தேதிய 14,868 1 ஆம் இலக்க இலங்கை அரசாங்க (அதிவிசேட) வர்த்தமானியல் வெளிவந்த இலங்கை ரூபாவிற்குச் சமமான அந்நிய நாணங்களின் ஒப்புமைகள் தொடர்பான விளம் பரம், அவ்விளம்பரத்தின் பட்டோலையிற் குறிக்கப்பட்ட ஒப்புமைகளுக்கு கீழ் வரும் பட்டோலையிற் குறிக்கப்பட்ட ஒப்புமைகளைப் பதிலிடுவதால் நாணயவிதி அதிகாரச்சட்ட 73 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்கத் திருத்தியமைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. தென்னக்கூன்,
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி.

கொழும்பு, ஒற்ரோபர் 30, 1969.

**பட்டோலை**

| நாடு | நாணயம் | ஒப்புமை ரூபா |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | டொலர் | 6.6666 |
| இத்தாலி | லிரு | 0.0095 |
| இந்தியா | ரூபாய் | 0.7936 |
| ஐக்கிய அமெரிக்கா | டொலர் | 5.9524 |
| ஐக்கிய அராபியக் குடியரசு | பவுண் | 17.0926 |
| ஐக்கிய இராச்சியம் | பவுண் | 14.2857 |
| கனடா | டொலர் | 5.5059 |
| கொங்கொங் | டொலர் | 0.9821 |
| சிரியன் அராபியக் குடியரசு | பவுண் | 2.7161 |
| சுவிற்சலாந்து | பிராங் | 1.3612 |
| சுவீடன் | குரோனு | 1.1506 |
| சேர்மன் சமஷ்டிக் குடியரசு | டொயிஸ் மார்க் | 1.6263 |
| டென்மார்க் | குரோனு | 0.7936 |
| தாய்லாந்து | பாற் | 0.2862 |
| தென்னுபிரிக்கா | ரூண்ட் | 8.3333 |
| நியூசிலாந்து | டொலர் | 6.6666 |
| நெதர்லாந்து | கில்டர் | 1.6443 |
| நோர்வே | குரோனு | 0.8333 |
| பர்மா | கியற் | 1.25 |
| பாகிஸ்தான் | ரூபாய் | 1.25 |
| பிரான்ஸ் | பிராங் | 1.0717 |
| பெல்ஜியம் | பிராங | 0.1190 |
| மலேசியா | டொலர் | 1.9444 |
| யப்பான் | யென் | 0.0165 |
| பிலிப்பைன்ஸ் | பெசோ | 1.5262 |

11–55.

S

## இலங்கை மத்திய வங்கி

### பொது ஐந்தொகை 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதியில் உள்ளபடி

**பொறுப்புக்கள்**

| | ரூபாய்கள் | ரூபாய்கள் |
|---|---|---|
| **மூலதனக் கணக்குகள்** | | |
| மூலதனம் .. .. | 1,50,00,000 | |
| மிகை .. .. | 5,50,00,000 | |
| | | 7,00,00,000 |
| **பொறுப்புக்கள்** | | |
| சுற்றோட்டத்தில் உள்ள தாள் நாணயங்கள் .. | 1,10,88,69,470 | |
| சுற்றோட்டத்தில் உள்ள குத்தி நாணயங்கள் | 6,91,75,731 | |
| | | 117,80,45,201 |
| **வைப்புக்கள்** | | |
| அரசாங்கம் .. .. | 1,92,56,502 | |
| அரசாங்க முகவராண்மைகளும் நிலையங்களும் .. | 33,66,964 | |
| வர்த்தக வங்கிகள் .. | 14,13,44,084 | |
| சர்வதேச நிறுவனங்களும், வெளிநாட்டு அரசாங்க, வெளிநாட்டு வங்கி நிலையங்களும் .. | 61,76,40,606 | |
| ஏனையவை .. | 1,18,30,837 | |
| | | 79,64,38,993 |
| வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் | | 18,46,38,593 |
| ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் .. .. | | 85,91,87,499 |
| | | 308,83,10,286 |

**இருப்புச் சொத்துக்கள்**

| | ரூபாய்கள் | ரூபாய்கள் |
|---|---|---|
| **சர்வதேச ஒதுக்கு நிதி** | | |
| இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும் நிலுவைகளும் (இறைசேரி உண்டியல்கள் உட்பட) .. | 5,49,31,482 | |
| *வெளிநாட்டு அரசாங்கப் பிணைகள் .. | 10,13,54,042 | |
| | | 15,62,85,524 |
| **உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள்** | | |
| கடன்களும் முற்பணங்களும்— | | |
| **அரசாங்கத்துக்கு | 31,47,93,214 | |
| ஏனையவற்றிற்கு | 9,01,25,000 | |
| அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் .. | 1,73,99,09,881 | |
| | | 2,14,47,93,214 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களும், கணக்குகளும் | | 78,72,31,548 |
| | | 308,83,10,286 |

*அரசாங்க நிலையங்களிலிருந்து (அ) 1964 பெப்புருவரி 1 இல் ரூபாய் 3,84,55,483 முகமதிப்புப் பெறுமானத்திலும் (ஆ) 1965 மே 24 இல் ரூபாய் 2,42,17,726 பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். இப் பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள் மேற்குறித்த தேதிகளில், முறையே ரூபாய் 2,99,49,102 ஆகவும் ரூபாய் 2,07,35,454 ஆகவும் இருந்தன.

**சர்வதேச நிதித் தாபனங்களுக்கு இலங்கையின் உறுப்புரிமைக் கட்டணங்களைக் கொடுப்பதற்கெனப் பெற்ற 8,94,58,333 ரூபாய்களைக் கொண்ட விசேட கடன்களை உள்ளடக்கும்.

எஸ். ஈ. பீ. ஜான்ஸ்,
துணை ஆளுநர்.

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

மேலே தரப்பட்டுள்ள ஐந்தொகை, எனது பணிப்பின் கீழ் கணக்குப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. வங்கியினால் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள், பதிவேடுகள் ஆகியவற்றின்படியும், எனக்களிக்கப்பட்ட தகவல், விளக்கங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டும், மேலே காட்டப்பட்டுள்ள ஐந்தொகை, 1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் நிலைமையைச் சரிவரக் காட்டுதற் பொருட்டு, முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென நான் கருதுகிறேன்.

கொழும்பு,
1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதி.

ஏ. குணநாயகம்,
கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபதி.

11–53

---

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

உணவு விலைக்கட்டளை இல. 144

மாட்டிறைச்சி.

### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களை கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உடகேவாகெற்றப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதிக்கும், உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) டியுபர் கருணதிலக்க தசநாயக்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1967 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ம் திகதியைக் கொண்ட இலங்கை அரசாங்க வர்தமானி இல. 14,780 4 ல் பிரசுரிக்கப்பட்ட 1967 ம் ஆண்டு திசம்பர் மாதம் 24 ந திகதியைக் உணவு விலைக்கட்டளை இல. 140 ஐ உடனடியாக நீக்கிவிடுகின்றேன்.

(2) இந்த அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே அப்பத்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விபரத்தையும் தரத்தையும் உடைய மாட்டிறைச்சி ஒரு இருத்தல் அட்டவணையில் அவற்றிற்கபைப 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்கு மேல் விற்கப்படலாகாத ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) "மாட்டிறைச்சி" என்னும் கூற்று மாட்டினது அல்லது எருமை மாட்டினது சதை எவ்வகையான கழிவுப் பொருளையும் உள்ளடக்காது எனவும்,

(ஆ) எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குளம்பு"கள், குடல், கழிவுகள், மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருடகளும் தவிர) விற்கப்படும்பொழுது அவ்விற்பனை வயிரற்ற நிறையில் விற்பனையாகக் கருதப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(4) மாட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகின்றேன்.

(5) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அவ்வட்டவணையில் குறிப்பிட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியைத் தம்வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ் விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டுமெனக் கட்டளையிடுகின்றேன்.

(6) மாட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டும் என்றும் இக்கடைகளில் குறிப்பிட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியன்றி வேறெந்த வகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவும் கட்டளையிடுகிறேன்,

(7) அட்டவணையில் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி விற்கப்படும் தொடர்சி—

அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிமட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்று பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்,

(8) ஒரு விற்பனையில் எலும்புடனோ எலும்பில்லாமலோ மாட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின், மாட்டிறைச்சி எலும்புடனோ எலும்பில்லாமலோ கழிவுகளிலிருந்து வேறாக நிறுத்து விற்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(9) ஒவ்வொருவயாபாரியும் மாட்டிறைச்சி விற்கும்பொழுது ஒருவர் மாட்டிறைச்சி கேட்டால் கழிவுகள் இல்லாத மாட்டிறைச்சியாக விற்கவேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்,

(10) ஒவ்வொருவியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்துகொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(11) இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகின்றேன்—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் நிறை ;
(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் விபரம் ;
(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(12) இக்கட்டளையினுல் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறெந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாதெனக் கட்டளை இடுகிறேன்.

(13) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் அடக்கியதாதல் வேண்டுமெனக்கட்டளையிடுகிறேன்.

(14) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இறுத்தல்" அல்லது "இறு" என்பது நிறுத்தலளவை முறையின் அவோர்டுபோஸ்" பிரமாண இறுத்தலாகக் கருதப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4 ந் திகதி காலை 9.30 மணிக்கு கண்டி கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

ரி. கே. தசநாயக்க,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு)
கண்டி மாவட்டமும் நுவரெலியா மாவட்டத்தில்
உள்ள உடகேவாகெற்ற பெரும்பாக
இறைவரி உத்தியோகத்தர் பகுதியும்.

அட்டவணை

| இடப்பரப்பு | மாட்டிறைச்சி (எலும்பில்லாமல் 1 இறு ஆகக்கூடிய விலை | மாட்டிறைச்சி (எலும்புடன்) 1 இறு. ஆகக்கூடிய விலை | (உயிரற்ற நிறை) மாட்டிறைச்சி ஒரு இறுத்தலுக்கான ஆகக்கூடிய விலை |
|---|---|---|---|
| பந்தி 1 | பந்தி 2 | பந்தி 3 | பந்தி 4 |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| கண்டி வருமான மாவட்டமும் நுவரெலியா மாவட்டத்தின் உடகேவாகெற்ற பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவும் | 1 20 | 1 0 | – 90 |

குறிப்பு.—மேற்குறித்த விலைகள் 1 இறுத்தல் மாட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகளாகும் இவற்றிற்கு மேலதிகமாக விற்கப்படலாகாது.

11–56.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.